Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 167/2022** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| Name | :: | **மேகலாதேவி (மருத்துவர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

25.03.2025

முதல் விசாரணை:

1. நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் மேலப்பாளையம் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.03.2021 ம் தேதி இரவு 10.20 மணியளவில் நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்தபோது செம்பட்டி தெற்கு தெருவை சேர்ந்த கருப்பசாமி மகன் சிறுமலை வயது 38 என்பவர் தன்னை அடையளாம் தெரிந்த 3 நபர்கள் கத்தி மற்றும் கையால் அன்றைய தேதியில் இரவு 08.40 மணியளவில் செம்பட்டி அருகே தாக்கியதாக சொல்லிச் சிகிச்சைக்கு வந்தவரை நான் பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. அவர் சுயநினைவுடன் இருந்தார்.

1. இடது உள் முழங்கைக்கு மேல்புறம் 5 cm x 3 cm x 3 cm அளவிலான சிதைந்த காயம் காணப்பட்டது.

அதற்கு தையல் இடப்பட்டு உரிய மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டு வெளி நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சையின் முடிவில்

அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்மந்தமாக விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. மேற் சொன்ன காயங்கள் ஒருவர் சாதாரணமாக நடந்து போகும்போது விழுந்தாலோ அல்லது சுவற்றில் போய் இடிக்கும்போது ஏற்பட்ட வாய்ப்புண்டா என்றால் இல்லை. கத்தியால் குத்தும்போது ஆழமான காயம் ஒழுங்கான சீர் அமைப்புடன் ஏற்பட வாய்ப்புண்டு. ஒருவர் தன்னை தானே கத்தியால் கீறி கொள்ளும்போது நீளமான காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு ஆனால் அது ஆழமாக இருக்காது. கத்தியால் குத்தும்போதோ கீறும்போதோ சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் வாய்ப்புண்டு. இரு நபர்கள் மோதி கொள்ளும்போது அவர்களின் எடை, எதிர்தரப்பினரின் பலம் ஆகியவற்றால் ஏற்பட வாய்ப்புண்டு. என்னிடம் சிகிச்சைக்கு வந்த சிறுமலை தன்னை 3 நபர் தாக்கியதாக என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை:

இல்லை.